காவலன் வருடசந்தா
இலங்கை, வெளிநாடுகள்
ரூபா 9-00
(தபாற்செலவு உட்பட)

# காவலன்

உள்ளே
ஆற்றல்மிக்க இளைஞர்க்கு
ஓர் அறைகூவல்
போர்க்களத்திலே ......
வீரர்கள் தேவை!

94-ம் புத். | 1969-ம் ஆண்டு பங்குனி மாதம் 8-ந் திகதி சனிக்கிழமை—பிரதி சதம் 15 | 9-ம் இல.

# இலங்கை மாகாணச்சங்க விசேஷ அமர்வு

## மாசி 28——பங்குனி 3

சென்ற வருடம் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் "சினொட்" என்ற பேரவையின் 1ஆம் அமர்வு ஆனிமாதம் 2ஆந் திகதி துவக்கம் 10ஆந் திகதி மட்டும் நடைபெற்றது. இச்சினொட் பேரவையின் இரண்டாம் அமர்வு மீண்டும் ஆவணி 26 ஆந் திகதி ஆரம்பமாகி ஆவணி 30-ந் திகதி முடிவடைந்தது. இரண்டாம் அமர்வில் இளைஞர் பிரதிநிதிகள் 16 பேர் உட்படச் சுமார் 240 பிரதிநிதிகள் பங்குபற்றினர். இலங்கைக் கத்தோலிக்கராகிய மேற்றிராணிமார், குருமார், கன்னியர் மற்றும் விசுவாசிகள் யாவரும் ஒன்று கூடி எவ்வாறு நம் நாட்டில் கத்தோலிக்க திருச்சபை சகல துறைகளிலும் முன்னேற்றம் அடையலாம் என வழிவகைகளை ஆராய்ந்தனர். தாம் எடுத்துக்கொண்ட முடிவுகளை — தீர்மானங்களை — திட்டங்களை வரிசைக்கிரமப்படுத்திக் கோர்வையாக்கும் பணிக்கு அப் பிரதிநிதிகளால் திறமை வாய்ந்த காரியக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அக்காரியக்குழுவின் வேலை முடிந்ததும் அவற்றை மீண்டும் அலசி ஆராய்ந்து மேற்றிராணிமார் சங்கத்துக்குச் சமர்ப்பிக்க இலங்கை மாகாணச் சங்கத்தின் விசேஷ பிரதிநிதிகள் இரண்டாம் சினொட் நடைபெற்றபோது தெரிவுசெய்யப்பட்டனர். இப் பிரதிநிதிகளின் தொகை சுமார் 40 இவர்களுள் 10பேர் இல்லற கத்தோலிக்கராயிருந்தனர் என்பது ஈண்டு குறிப்பிடல் வேண்டும்.

இவர்களின் கூட்டம் இவ்வருடம் மாசி 28ஆந் திகதி துவங்கி பங்குனி 3ஆந் திகதி மட்டும் கொழும்பு அதிமேற்றிராணியார் இல்லத்தில் நடைபெற்றது. காரியக்குழு உருப்படுத்திய திட்டங்கள், முடிபுகள், தீர்மானங்கள் யாவற்றையும் மீண்டும் நன்றே அலசி ஆராய்ந்து விசேஷமாக எவ்வித மறுமலர்ச்சிகளை, புது நிறுவனங்களை இலங்கையில் ஏற்படுத்தவேண்டுமென்று நன்கு அவதானித்து ஆலோசிப்பதே இக் கூட்டத்தின் முக்கிய நோக்கமாயிருந்தது.

இக் கூட்டம் இலங்கைக் கருதினல் மகா வந்தனைக்குரிய கருதினல் கூறே, அ. ம. தி. தலைமையில் நடைபெற்றது. இலங்கையில் பணிபுரியும் சகல ஆயர்களும் அவர்களின் உதவி ஆயர்களும், மூப்புச் சுவாமிமார், மேற்றிராசன ஆலோசனைச் சங்கக் குருக்களின் பிரதிநிதிகள், குருக்கள்சபைத் தலைவர்களின் பிரதிநிகள், கன்னியர் சபைத் தலைவிகளின் பிரதிநிதி, இல்லற கத்தோலிக்கரின் பிரதிநிதிகளுமே இங்கு சமுகமளித்தனர்.

இக் கூட்டத்தில் 1. திருச்சபையின் பணி 2. சேவை 3. இலங்கையில் திருச்சபை 4. இறைபணி 5. கிறிஸ்தவக் கல்வி 6. பொது நிலையினரின் அப்போஸ்தலத்தவம 7. குருக்கள், சந்நியாசிகள், கன்னியரின் வாழ்வும் பணியும் 8. இத் திட்டங்களை அமுல் செய்யும் வழிவகைகளும ஏனைய மக்களுடன் தொடர்புகளும், உறவுகளை ஏற்படுத்தக்கூடிய கருவிகளும் என்ற விஷயங்களைப் பற்றியே பெரும்பாலும் விவாதம நடைபெற்றது. அவற்றிற்கேற்ற நிறுவனங்களை எவ்வாறு இலங்கையில் ஸ்தாபித்து இயக்கலாம் என்ற பிரச்சினை ஆழமாக ஆராயப்பட்டது.

இத் தீர்மானங்கள் தற்போது இறுதி நிலையை அடைந்திருக்கின்றன. இவைகள் யாவும் இனி இலங்கை ஆயர்களின் கூட்டுச்சபைக்குச் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## அன்பரின் அமர்வு அருளைப்பெருக்கும்
## அன்பர் அரங்கம்

பொருள்: என் சகோதரனுக்கு நானே காவலன்?
பேச்சாளர்: திரு. எம். அந்தோனிப்பிள்ளை, B. A.
நிகழிடம்: டி மொன்போட் சாலை, ஆசனக்கோவில்.
நாள்: 10—3—69 திங்கள்.
காலம்: பிற்பகல் 5-00 மணி.

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

## பரிசுத்த தந்தை ஆபிரிக்கா செல்லுவாரா?

பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பர் இந்த வாரத்தில் ஆபிரிக்கா செல்லுவதாக வத்திக்கானின் நம்பக்கூடிய வட்டாரங்களில் செய்தி பிறந்திருக்கின்றது. வழக்கமாக பாப்பானவரின் வெளிநாட்டு விஜயங்களுக்குமுன் ஆயத்தம் செய்யும் வத்திக்கான் அதிகாரி மகா. வந். மார்க்சினஸ் அண்மையில் ஆபிரிக்காசென்று திரும்பியிருக்கிறார்.

1964ஆம் ஆண்டில் தாம் பரிசுத்த பட்டம் சூட்டிய 22 ஆபிரிக்க வேதசாட்சிகளின் பெயரால் கம்பளா (உகண்டா)வில் ஒரு ஞாபகார்த்த ஸ்தாபனத்தை ஆரம்பிப்பதற்காகவே செல்லவிருக்கிறாரென்று அறியப்படுகிறது. பாப்பானவராவதற்கு முன்பாக மிலான் நகரின் அதிமேற்றிராணியாராயிருந்த பொழுது (கருதினல் மொன்ரினி) தாம் ஆபிரிக்காவிற்குச் செய்த தரிசனையைப்பற்றி தற்போதைய பரிசுத்த தந்தை மிகவும் மகிழ்ச்சியுடன் அடிக்கடி நினைவு கூர்ந்து பேசுவது வழக்கம்.

### அநீதி முறையில்
## மனம்திருப்புதல் வேண்டாம்

இன்டோர், இந்தியா

இந்தியாவின் திருச்சபையிலே வத்திக்கான் பிரதிநிதியாக இருக்கும் அதிமேற்றிராணியார் காப்பிறியோ திருச்சபை வலோற்காரமான அநீதியான மனம் திருப்புதல்கள் அரசாங்க ஒழுங்கு கட்டு மாத்திரமல்ல திருச்சபை ஒழுங்குகட்கும் எதிரானதெனவும் மனந்திரும்புதல் ஒவ்வொருவருடைய தனி மனச்சாட்சியையும் பொறுத்ததென்றும் யாராவது அநீதி முறையில் மனம் திருப்புதல்கள் செய்வித்தால் நாம் கடினமான நடவடிக்கை அவர்மீது எடுப்பதாகவும் தெரிவித்தார்.

### டமியன் சுவாமியாருக்கு
## முத்திப் பேறுபெற்ற பட்டமா?

மொலக்காய் தீவு குஷ்டரோகிகள் சேவையில் தமது வாழ்நாளில் பெரும்பகுதியைச் செலவு செய்து, தாமே குஷ்டரோகத்தினுல் பீடிக்கப்பட்டு மரணித்த டோமியன் சுவாமியாருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் அளிப்பதற்கு வேண்டிய முயற்சிகளில் பெரும் பகுதி முடிவுபெற்றுவிட்டது. முதன் முதல் அவரது இளம்பராயகாலம் ஆராயப்பட்டது. அவரது வீரப் புண்ணிய கிரிகைகள் அண்மையில் ஆராயப்பட்டன. எஞ்சிய பகுதிகள் தீவிரமாக நடைபெறுமெனக் கூறப்படுகின்றது.

## விரத்த குருவர் வேண்டுமென்கின்றனர்

— இளைஞர் சங்கம்

குருக்களும் கன்னியர்களும் விரத்தத்துவத்தை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமென்று லிவர்ப்பூல் இளைஞர் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர். கடந்த சில மாதங்களில் குருக்கள் கன்னியர்கள் விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்ற அபிப்பிராயங்கள் அடிபட்ட அதே மேற்றிராசனத்தின் இளைஞர்கள் அண்மையில் "அழைத்தல் மகாநாட்டில்" கூடியபொழுது இக் கருத்தை ஏகமனதாக வெளியிட்டனர்.

குருக்கள் சந்நியாசிகள் தனிவாழ்வை அனுசரிப்பது இயற்கைக்கு மாறுனதல்ல. ஆனுல் கடவுளின் அன்பின் அழைப்புக்கு பூரணமான பதிலளிப்பே. குடும்பவாழ்க்கையில் தம்பதிகள் ஒருவருக்கொருவர் பிரமாணிக்கமாகவும் தன்னலமற்றும் இருக்க அழைக்கப் படுகின்றார்களோ அதே விதமாக குருக்கள் சந்நியாசிகளும் கிறிஸ்துவிற்கு பிரமாணிக்கமாகவும் தன்னலமற்றும் இருக்கவேண்டும்.

## சமய உண்மைகளில் மாற்றமில்லை

"2-ம் வத்திக்கான் சங்கத்தின்பின் கத்தோலிக்க திருச்சபை புதிய தோற்றத்துடன் விளங்குகிறது. பல வழிபாட்டு முறைகளில் பாரிய மாற்றங்கள் புகுத்தப்பட்டது உண்மையே. ஆயினும் போதனைகளிலோ, சமய உண்மைகளிலோ சிறிதளவேனும் மாற்றம் ஏற்படவில்லை. இக்காலத்துக்கு ஏற்ற முறைகளைப் புகுத்தும் நோக்கம் பெரிதளவும் பூர்த்தியாகிவிட்டது. எவரேனும் இம்மாற்றங்களைக் கண்டு அஞ்சுவதற்கு இடமில்லை" என அவுஸ்திரிய தேச கருதினல் அத்தேசத்தில்வெளிவந்த "கொங்கறன்ஸ்" என்னும் புதிய சஞ்சிகையில் எழுதியிருக்கிறார்.

### ஈராக் அரசாங்கத்தின்
## உதார குணம்

ஈராக்கில் பெரும்பாலான மக்கள் இஸ்லாம் மதத்தினரே. ஆகவே பள்ளிக்கூடங்களிலும் பெரும்பாலான மாணவ மாணவிகள் அம் மதத்தவரே. ஆனல் இடையிடையே மறு சமயத்தவர்களும் பெரும்பாலாக இருக்கும் நகரங்களும் பட்டணங்களுமுண்டு. இத்தகைய இடங்களில உள்ள பள்ளிக்கூடங்களில மாணவ மாணவிகளின சொந்த சமய போதனையும் செய்ய அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது.

## ஆனல் இங்கே?

லண்டன்மாநகர பொலிஸ் நிலைய மத்தியாகிய ஸ்கொட்லன்ட் யார்டில் காரியதரிசி பதவிவகிக்கும் திரு. ஹட்சன் இலங்கையில் சில வாரங்கள் தங்கிச்செல்கின்றார். சென்ற வாரம் பத்திரிகை நிருபர்கள் அவரைப் பேட்டிகண்டு சம்பாஷித்துக் கொண்டபோது தெருவிபத்துக்கள் பற்றி லண்டன்மாநகரில் உள்ள நிலையைக் கேட்டுக் கொண்டார்கள். அங்கே இத் தேசத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தெரு விபத்துக்கள் மிகக் குறைவுஎன்றும், இரட்டைத்தட்டு பஸ்வண்டிகள் விபத்துகளில் பெரும்பாலும் சிக்கிக்கொள்வதில்லையென்றும் அதற்குக் காரணம், இத்தகைய வண்டிகளை ஓட்டும் சாரதிகளுக்கு விசேஷ பயிற்சி அளிப்பதும், விபத்துக்களில் சிக்காத சாரதிகளுக்கு விசேஷ சன்மானங்கள் அளிப்பதுமேயாகும் என்றார்.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலன் கருத்து

## ஏது நாகரிகம்?

நாகரிகம் என்னும் பெயரில் உலகில் நடந்துவரும் அலங்கோலங்களைப் பார்த்தால் இதுதான் நாகரிகமா என்ற கேள்வி பிறக்கின்றது. நாகரிகம் என்ற சொல் இன்று தன் உண்மையான கருத்தை இழந்து பிழையான அர்த்தத்திலேயே பெரும்பாலும் கையாளப்படுகிறது. மனிதனின் சுகவாழ்வுக்குரிய ஏதுக்களை உண்டாக்கிக்கொள்வது என்பதே நாகரிகம் என்பதை விடுத்து, பிறர் செய்வனவற்றையெல்லாம் காரணகாரியமின்றி வானரங்களைப்போல் பின்பற்றுவதே நாகரிகமெனக் கருதப்படுகிறது. அரை நிர்வாணமாக உடைதரிப்பது முதல், ஒரு படக்காட்சி தவறாமல் பார்ப்பதுவரை, எல்லாம் ஊருடன் ஒத்துவாழ் என்னும் பழமொழிக்கிசைய நடக்கிறதேயொழிய, இந்தப் பைத்தியகாரத்தனமான ஓட்டப்பந்தயத்தில் ஏதாவது அர்த்தமுண்டா, நன்மையுண்டா என்று யாராவது சிந்திக்கிறார்களா?

எமது நாட்டுக்குரிய பண்பாடும் கலாச்சாரமும் தெய்வத் தன்மையையும் நல்லொழுக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டவை. அதைத்தான் மறந்தாலும் கிறிஸ்தவ சன்மார்க்கத்தையும் போதனைகளையும் கைவிட்டுத் தப்பான வழியில் நடக்கலாமா? உப்பானது தனது சாரத்தை இழந்ததுபோல் பிறருக்கு வழிகாட்டிகளாகவிளங்கவேண்டிய கிறிஸ்தவர்கள் தாமே தவறான வழியில் சென்றால் உலகிற்கு மீட்பைக் கொண்டுவருவது யார்? ஊருடன் ஒத்து வாழ்வதற்கு ஓர் எல்லையுண்டு. ஒவ்வொருவரும் சுயமாகச் சிந்தித்து தீர்மானிக்கவேண்டிய சுதந்திரம் பெற்றிருக்கும் இந்நாளில் அடிமைத்தனமாகப் பிறரைப் பின்பற்றுவது ஏன்? தாம் செய்யப்போகும் காரியம் சரியானதா, தமக்கு நன்மைபயக்கக்கூடியதா, மற்றவர்களுக்கு இடறலாக இராதா, என்பனவற்றை நன்கு நிதானமாகச் சிந்தித்தே எதையும் மேற்கொள்ள வேண்டும். முன்னைவிட கல்வியறிவும், பரந்த உலக அறிவும் மக்கள் பெற்றிருந்தாலும், அவர்கள் கற்ற கல்வியெல்லாம் அவர்கள் உள்ளத்தைப் பண்படுத்தாமல் ஏட்டுச் சுரைக்காயாக நின்றுவிட்டால் அதனால் பயன் யாது? உண்மையான அறிவும் உள்ளப் பண்பாடுமுள்ளவர்கள் தமது நாகரிகத்தைக் காட்டுவதற்கு மினியுடையையும உதட்டுச் சாயத்தையும் நாடத்தேவையில்லை. கண்மூடித்தனமாக கண்ணராவிக் கோலங்களைப் பின்பற்றவும் வேண்டியதில்லை. அகத்திலே அழகுண்டாயின் அது முகத்திலே பிரதிபலிக்கும். ஏனையவெல்லாம் போலியும் மேற்பூச்சும் ஆகும்.

## இல்லறத்தோர் நடப்பிக்கும் மிஷன் சேவை

இங்கிலாந்தில், லங்கஷயர் பிரிவில் தர்மசிந்தனையுள்ள இல்லறப்பெரியோர் நிறுவியிருக்கும் தர்மசபையின் நிலையத்தின் முயற்சியால் தென அமெரிக்க கண்டத்தின் பேரு தேசத்துக்கு 3 கன்னியாஸ்திரிகள் அனுப்பப்படுகின்றனர். இவர்கள் அங்கே வறியபகுதியில் ஒரு சிறு வைத்திய சாலையை நடப்பிப்பார்கள். தொடக்கத்தில் 20 நோயாளர்களைப் பராமரிக்க ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இந்த வைத்தியசாலை இங்கிலாந்திலுள்ள இல்லறப் பெரியோர் தர்மசபையின் கண்காணிப்பிலேயே நடைபெறும்.

# தேடிவரும் தேவனை தள்ளிவிடாதீர்

வாழ்வினை வழங்கிடும் வள்ளல் கிறீஸ்து
குருதி சிந்திக் குவலயம் மீட்ட கிறீஸ்து
அகத்தில் அமைதி அளித்திட
அழைக்கின்றார் வருக!

### யாழ்ப்பாணம் ஆசனக்கோவில்

## தவக்கால ஞான ஒடுக்கங்கள்

பெண்களுக்கு: பங்குனி 9 தொடக்கம் 15 வரை
ஆண்களுக்கு: „ 16 „ 22 வரை

காலைத் தியானங்கள் முதலாம் இரண்டாம் பூசைகளுக்கு இடையில் இடம்பெறும்.

மாலை ஆராதனைகள் 6 மணிக்கு ஆரம்பமாகும்.

# தன்னலம் மறுத்துத் தவப்பயன் பெறுவோம்

பந்தயக்களத்தில் பலர் ஓடுகின்றனர்; வெற்றிபெற முயல்கின்றனர். பந்தய ஓட்டத்திற்குமுன் பல்வேறு பயிற்சிகளை மேற்கொள்ளுகின்றனர். உடலை ஒடுக்கி, உறுப்புக்களை இயக்கி, விருப்பங்களை அடக்கி, திறன்களை ஒருமுகப்படுத்தி உழைக்கின்றனர். போட்டி ஆரம்பமானதும் மூச்சைப் பிடித்துக்கொண்டு, காற்றாய்ப் பறக்கின்றனர். பாதைகளை அகற்றிப் பாய்ந்து ஓடுகின்றனர். இத்தகைய முயற்சிகள் எல்லாம் ஏன்? "அழிந்துபோகிற முடியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றே அப்படிச் செய்கிறார்கள்" என்கிறார்புனிதசின்னப்பர் (1கொ. 9 : 28).

நாமும் ஓடுகிறோம் எதற்கு? அழியும் முடியைப் பெற்றுக்கொள்ளவா? "நாங்களோ அழியா முடியைப் பெற்றுக் கொள்ளப் பிரயாசைப்படுகிறோம்" என்பது புனித சின்னப்பரின்பதில் (1கொ. 9: 25). அழியும் முடியைப் பெற அத்தனை முயற்சிகளையும் கைக்கொண்டால் அழியாவிண்ணக முடியைப் பெறும் நாம் நம்மை ஒறுத்து நோன்புசெய்ய வேண்டாமா? பந்தய ஓட்டத்தில் ஓடுபவர்கள் எல்லோரும் பரிசில் பெறுவதில்லை. விண்ணரசின் போட்டியில் அனைவரும் மகிமையின் முடியைப் பெறலாம்; பெறவும்வேண்டும். வெற்றி கிடைக்குமோ என ஐயுறவுடன் ஓடுவோர் தங்களையே அடக்கி ஆர்வமுடன் முயல, நம்பிக்கையில் ஓடும் நாம் தயங்கலாமா நம்மை ஒறுக்க? காற்றில் சிலம்பம் அடிப்போர் வெற்றுபெறும் வரை களைப்பதில்லை. நாம் மட்டும் சளைக்கலாமா?

கிறிஸ்து யேசு காட்டிய வழியைப் பின்பற்றும் நாம் அவர் விடுத்த அழைப்பை மறக்கலாமா? அன்றேல் மறுத்து மறைக்கலாமா? "மனந்திரும்பும்படி பாவிகளையே அழைக்கவந்தேன்" (லூ 5 : 32). "மனந்திரும்புங்கள்; ஏனெனில், விண்ணரசு நெருங்கிவிட்டது" (மத். 4: 17).

மனந்திரும்புதல் நோன்பின் பயன். நமது விருப்பங்களை மறந்து நம்மை ஒறுப்பது நோன்பின் இயல். பழைய பாவ மனிதன் இறந்தாலன்றி கிறிஸ்துவில புதிய மனிதன் பிறக்கமுடியாது. பழையமனிதன் இறந்தொழிய நோன்பு இன்றியமையாதது. "அறநெறி மாந்தர் அவனியில் சிலராவது நோன்பு செய்யாதவர் பலராவதே" என்பது வள்ளுவர் வாய்மொழி. "இலர் பலர் ஆகிய காரணம் நோற்பார் சிலர் பலர் நோலாதவர்."

திருச்சபையும் தனது திருப்பணி ஆண்டில் தவக்காலத்தை ஏற்படுத்தி நோன்பு செய்ய நம்மை அழைக்கிறது. உடல் ஒறுப்புக்கான சட்டங்களைத் தளர்த்தி,உள்ளன்போடும் உரிமையோடும் தவ ஒடுக்கத்தைக் கடைப்பிடிக்க அறிவுரை பகர்கின்றது. உடலில கொள்ளும் தவ ஒடுக்கத்தை உள்ளத்திலும் நேர்மையுடன் கடைப்பிடிக்க அருள்புரியுமாறு இறைவனை இறைஞ்சுகிறது. நோன்பின் மேலான பண்புகளை மறைநூலின் வாசகங்கள் வழியாகப் போதிக்கிறது. எடுத்துக்காட்டாக :—"...அக்கிரமத்தின் தளைகளை அறுப்பதும், கடன் சீட்டுச் சுமையை இறக்குவதும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும், பளுவனைத்தையும் உடைத்து எறிவதும் மேலன்றோ." பசித்தவனுக்கு உன் அப்பத்தைப் பகிர்ந்து கொடு; ஏழைகளையும், அகதிகளையும் உன் வீட்டில் ஏற்றுக்கொள்; ஆடையற்றவனைக் கண்டால் அவனுக்கு ஆடை கொடு; உன் இனத்தாரை நிந்திக்காதே; இதுவன்றோ நாம் விரும்பும் மேலான நோன்பு! (இசை. 58 : 6—7). இது எல்லாம்வல்ல இறைவனின் திருமொழி.

திருச்சபை தரும் தவத்திரு நாற்பது நாட்களையும், அதன் படிப்பினைக்கேற்பக் கடைப்பிடிப்போம். உளம் திருந்தி, இறைவன் பக்கம் திரும்புவோம். உயிர்ப்பு விழாவில் கிறிஸ்துவோடு மகிழ்ச்சி பெறுவோம், மகிமையடைவோம்.

ம. யேசுதாசன்.

## அமெரிக்க ஜனதிபதி நிக்சன் பாப்பரசரைச் சந்தித்தார்

சென்ற ஞாயிறுதினம் அமெரிக்க ஜனதிபதி நிக்சன் அவர்கள் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பபாப்பரசரை வத்திக்கானில் சந்தித்தார், இச்சந்திப்பின்போது நடந்த சம்பாஷணைகளின் விபரம் இன்னும் நமக்கு எட்டவில்லையெனினும் பாப்பரசருக்கு மிகவும் கவலையூட்டும் இரு விஷயங்களைப்பற்றியும் அவர்கள் கலந்து ஆலோசித்துக் கொண்டார்கள் என நிச்சயமாகக் கூறிவிடலாம். அவை வியற்னும் தேச நைஜீரியாதேச விஷயங்களாகும். 35 நிமிடங்களில் முடியுமென எதிர்பார்க்கப்பட்ட இச்சந்திப்பு 1 மணித்தியாலத்துக்குமேல் நீடித்தது குறிப்பிடத்தக்கது.

## ஸ்பானியதேச மேற்றிராணிமாரின் ஆலோசனைக் கூட்டம்

மாசிமாதக் கடைசிவாரத்தில் ஸ்பானியதேச மேற்றிராணிமார் ஒன்றுகூடி அவர்கள் தேசத்திலுள்ள பலபிரச்சினைகளையும் ஆராய்ந்து கொண்டனர்; இக்காலத்தில் நாட்டின் பெரும்பகுதி அவசரகாலச் சட்டத்தின்கீழ் ஆளப்படுவதாலும், மாணவர் தொழிலாளர் குழப்பங்கள் தலைகாட்டிவருவதாலும் திருச்சபை அந்நாட்டில் கூடியளவு ஒரேவிதமாக நடந்துகொள்ள வழிவகைகள் ஆராய்வதே அக்கூட்டத்தின் நோக்கமாகும்;

## பரி. பட்டம் பெறவிருக்கும் பாப்புமார்

காலஞ்சென்ற 12 ஆம் பத்திநாதரும், 23 ஆம் அருளப்பரும் எப்போது அர்ச்சியசிஷ்ட பட்டம் பெறப்போகின்றார்கள்? இவர்களின் பெயரில் நடாத்தப்பட்டுவரும் ஆரம்ப ஆராய்ச்சிகள் தேவையற்ற தாமதமின்றி விரைவுபடுத்துவதற்கு 6 ஆவது சின்னப்பர் ஊக்கமும் உதவியும் கொடுத்திருக்கின்றார். வழக்கமாக ஒவ்வொரு சாட்சிகளுக்கும் மூன்று நீதியஸ்தர்கள் நியமிக்கப்பட்டுவந்த முறையை மாற்றித் தற்போது ஒவ்வொரு சாட்சிகளுக்கும் ஒவ்வொரு நீதியஸ்தர் நியமிக்கப் பட்டிருக்கின்றனர்.

## இலங்கையின் புராதனசபை யாது?

"இலங்கைக் கிறீஸ்தவத்தின் சரித்திரத்திலே மிகவும் புராதன கத்தோலிக்கசபை பத்திரிசியார் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட திரு இருதயக் கூட்டம்" இவ்வாறு முன்ஒருகால் கல்லூரி அதிபராயிருந்த வண. பி. ஏ. யோண் சுவாமிகள் மேற்படி மாதாந்தக் கூட்டத்தில் பிரதம பேச்சாளராகப் பேசும்போழுது கூறியிருந்தார்.

கூட்டம் 3-3-69 இல் புனித ஞானப்பிரகாசியார் சாலையில் திரு. பி. யே. அமிர்தநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இதய தாகம் தீர்க்கும் இறைவனே வருக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவன் நல்லவன்; ஆனால், சந்தர்ப்பம், சூழ்நிலை அவனை விடுவதாயில்லை. காலப்போக்கில் முரடனானான். இல்லை, காமவெறியனானான். காமம் கண்ணை மூடிற்று. அவளைத் தன் அனுபவப் பொருளாக மாற்ற நினைத்தான். ஆனால் ... யாரைத் தன் அனுபவப் பொருளாக மாற்ற நினைத்தானோ அவள் ஏலவே இன்னோர் மணாளனைக் காதலித்தாள். அம்மணாளனை உளமார நேசித்தாள். முடிவு?**

# மாறியது நெஞ்சம்

— சி. எ. செல்வராசா

அன்று 1937-வது வருடம், மனித சமுதாயத்திலிருந்து விடைபெற, தன்னையே தயார் செய்தது. 1938-வது வருடம் நல்வரவுகூறி புதுப்பொலிவுடன்வர இருந்தது. இன்னும் என்ன ஆறு நாட்கள்தானே உண்டு என்ற அமைதியில் தன்னையே தேற்றிற்று.

இளம் தென்றல் வீசும் இனியநேரம். அனைவரும் மறுநாள் கிறிஸ்மஸ் நன்னாளை நன்கு கொண்டாடத் தயார் செய்தனர். குடில் ஜோடிக்கும் குட்டிகள் குழாம் கும்மாளம் அடித்தது. வாலிபர் ஏன்? வயோதிபர்கூட புத்துணர்ச்சியுடன் தோன்றினர். எங்கும் இன்பமயம். இனிய யேசு இத்தரையில் தவழ்ந்த நாளல்லவா? மகிழ்ச்சியில்லாமல் பின்னே? ஆனால், "கொரினல்டோ" கிராமத்தில் அதுவும் அச்சிறு குடிசையில் மட்டும் அழுகுரல் கேட்கக் காரணம்? ஆம் மனஸ்தாபக் கண்ணீர்! வாலிப முறுக்கேறிய வலிமைமிக்க வாலிபன் ஒருவன் தாயன்புடன் தன்னை நேசித்த பெண்ணின் முன் சிந்தும் கண்ணீர்வெள்ளம்! மன்னிக்கவும். துயரஇதயத்தின் குமுறலால் பாளும் இரத்தம்!!

"கொரினல்டோ" கிராம பங்குச் குருவின் நன்மதிப்பைப் பெற்ற குடும்பமது. கிறீஸ்தவக் கடமையை உணர்ந்து வாழ்ந்து வந்தது. இறையருளால் இனிது இன்புற்றிருந்தது அக்குடும்பம். எளிமை நிறைந்திருந்தது அவர் தம் இல்லம்! ஆனால் ஆன்ம இல்லம் எல்லையில்லா அழகுடன் விளங்கிற்று. பொற்குடத்திற்கு பொட்டிடுவதுபோல் "அஜந்தா"என்ற புண்ணியசீலி ஒரு பெண்குழந்தையைப்பெற்றாள். நான் ஒரு புனிதையைப் பெற்றேன் என்று கனவிலும் கருதினாளா அத்தாய்?

குழந்தை தவழ்ந்தது; நடந்தது; மழலைமொழி பேசிற்று; பள்ளிசெல்லும் பருவம் பறந்தது; அழகின் முழுமை அவள் உடலில் தோன்றியது. எழிலால் விளங்கினாள் மரியா!

அவன் நல்லவன், துடுக்குள்ளவன், கூரிய புத்தியுள்ளவன். ஆனால், வயது அவனை வாட்டிற்று. இயற்கையின் இன்னலில் புடம் போடப்பட்டான். பொழுது போக்கிற்காக புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்தான். அவனைச் சொல்லி குற்றமில்லை. அன்னப்பட்சியிடமிருக்கும் அருங்குணம் அவனிடமில்லை. நற்புத்தகங்களுக்குப் பதில், கீழ்த்தர உணர்ச்சிகளை ஊட்டிவிடும் ஏடுகள் அவன் கையில் தாண்டவமாடின. ஆரம்பத்தில் பொழுது போக்கிற்காக ஆரம்பித்த அறிவுப்பசி, காமப்பசியாக உருவெடுத்தது. இதற்குக் காரணம், புத்தகம்! கதைப்புத்தகம்!!

தண்ணீரையும் பாலையும் கலந்து வைத்தால் தண்ணீரைத் தவிர்த்து, பாலைப்பருகுமாம் அன்னப்பறவை. எழுத்தாளர் உலகம் உருவாகி பல வருடங்கள் ஓடிவிட்டன. எம் ஈழத்தில், ஆனால், அறிவை ஊக்கும் பேனாமுனைகள் அறிவை மழுங்க வைக்கும் காலமிது. கம்பராமாயணத்தில் எத்தனை காண்டம் உண்டு என்று கேட்டால் விழிப்போர் பலர். ஏன்? சுந்தரகாண்டத்தில் எத்தனை படலம் என்றால் தலையைச் சொறிவோர் சிலர்! பிரதாப முதலியார் யார்? என்றால், அதை யாரறிவார் என மறு கேள்வி போடுவர், ஏன்? வேதாகமம்......என்று பேச்சைத் தொடங்கினால் வேதாந்தம் போதும்என முற்றுப் புள்ளி போடுவோர் எம்மில் இல்லையா?......காரணம்? மவுனம்!!



அவன் நல்லவனாயினும் சந்தர்ப்பம் சூழ்நிலை அவனை விடுவதாயில்லை. காலப்போக்கில் முரடனானான். இல்லை, காமவெறியனானான். காமம் கண்ணை மூடிற்று தேனைத் தேடி அலையும் தேனீபோல் அலைந்தான். மரியாவைத்தன் அனுபவப் பொருளாக மாற்ற நினைத்தான். அதற்காக அவன் செய்த சூழ்ச்சிகள் திட்டங்கள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராயின. ஏன்...ஆம்! மரியா தன் புதுநன்மை நாளிலே தன் தாய்மையை, இனிய இறை யேசுவுக்கு அர்ப்பணித்திருந்தாள். ஆம் அவள் வேறு ஒரு மணாளனைக் காதலித்தாள். அம்மணாளனை உளமார நேசித்தாள். தன் காதலனை தன் இதய வீட்டிலிருந்து துரத்த எப்படித் துணிவாள்.

காமத்திற்குக் கண்ணில்லையல்லவா? ஆம், அவன் துணிந்துவிட்டான். இரண்டிலொரு முடிவுக்குவர எண்ணினான். பற்றினான் பாவையை, பதறினாள் பூவை. கெஞ்சினான் அவன். மிஞ்சினாள் அவள். உருவினான் கத்தியை, உதடுகள் உதறின. உருவம் பதறியது. சிறிது நேரம் மவுனம், சதக்... சதக்....சதக்....சதக்....நாலு தடவையல்ல. நன்னான்கு தடவை அச்சத்தம் அவ் அறை முழுவதும் எதிரொலித்தது. பயன்?

ஆம்! அவளுக்காகக் காத்திருந்தார் அவள் காதலன். இன்னும் இக்கிர்ப்பாக்கிய உலகில் அவளுக்கு என்ன வேலை?......

காம வெறியனால் தப்பிக்க முடியவில்லை. அரசியலாரை அலட்சியம்செய்தான். பயன்? ... முப்பது வருடக் கடுங்காவல்! பாவம், சிசிலித்தீவுக்கு அனுப்பப்பட்டான். இது நடந்து இன்று அறுபத்தைந்து ஆண்டுகள் உருண்டுவிட்டன.

1937-ம்வருடம் அவனுக்கு விடுதலை. சிறைக் கதவுகள் திறந்தன. அவன் இதயமும் திறந்தது. தன் கையால் கொலை செய்யப்பட்ட மரியாவின் தாய் அசுந்தாவின்முன் மன்னிப்புக் கோரிக் கண்ணீர் சிந்தினான். அவளும் மன்னிப்புக் கொடுத்தாள். என்னே ஆண்டவனின் அற்புதச்செயல்கள். மறுநாள் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு அசுந்தாவும், அவ் அக்கிரமியும் — மன்னிக்கவும்! அலெக்சான்டரும் சேர்ந்து திருப்பலிக்குச் சென்றனர். பூசை முடிந்ததும் பங்கு மக்களிடம் மன்னிப்புக் கேட்டான். ஆம்! அவன் மாறிவிட்டான். முந்திய அலெக்சான்டரல்ல, புதிய — இல்லை புனித அலெக்சான்டர்.

சிந்தனை சிறகடிக்கத் தொடங்கியது. பயன்?...சிறைக்கூடத்திலிருந்து வெளிவந்த அவர் கால்கள் அறக்கூடம் நோக்கி அமைதிநடை போட்டன. எங்கு? "அங்கோனி" என்ற இடத்திலுள்ள கார்த்தூசியன் துறவறஇல்லத்திற்கு. அலெக்சான்டரும் துறவியானார். அத் துறவற மடத்தில் இன்றும் உயிருடன் இருக்கிறார். மலர்த்தோட்டத்தைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு உழைக்கிறார். தன் பாவத்தைநினைத்துக் கண்ணீர் சிந்தியவண்ணமிருக்கிறார். அவரைச் சந்திக்கச் செல்பவர்களிடம் அவர் இதயம் புத்தகம்... கதைப்புத்தகம் என்று விம்முகிறது. காரணம்?

மரியாவின் முடிவு! அதைப்பற்றி ஏன் கவலை? அவள் மரியா அல்ல, புனித மரிய கொரத்தி.

## திக்கற்றோருக்கு ஒரு புதிய ஆறுதல்

கொழும்பு வடபிரிவிலுள்ள மாதம்பிற்றியாப்பிரிவில் திக்கற்றிருக்கும் வறியவர்களுக்கென ஒரு புதிய ஆறுதல் நிலையம் திறக்கப்பட்டிருக்கின்றது. இந்நிலையம் தர்ம வேலைகளுக்கு உலகப்பிரசித்திபெற்ற தெரேசாதாயார் அவர்களால் நிறுவப்பட்ட தர்மசபையாரால் நடத்தப்படும். எச்சமயத்தவருக்குமே பொதுவான ஸ்தாபனம். சென்ற செவ்வாய்தினம் திறப்புவிழாவன்று தெரேசா தாயார் அவர்களும் இந்தியாவிலிருந்து இதற்கெனச் சமூகம் அளித்திருந்தார். தேசிய மயசேவை மந்திரிசுகததாசா அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

## கல்விவிற்பன்னர் மகாநாடு

ஆசியாவின் 13 தேசங்களில் கல்விச்சேவை செய்யும் விற்பன்னர்கள் முப்பதுபேர் இம்மாதம் ஹொங்கோங் நகரில்கூடி மகாநாடு நடத்த இருக்கின்றனர். இத்தகைய ஆசியதேச கத்தோலிக்க கல்வி விற்பன்னர் மகாநாடு சென்ற [illegible] நடந்து வருகின்றது. இது 4-வது மகாநாடாகும்.

# நீர் தேவகுமாரனாயிருந்தால் இந்தக் கல்லை அப்பமாக்கும்

(வண. பிதா வே. அன்ரனி ஜோண்)

### சாத்தானின் சவால்:

பசிவந்தால் தான் புசிக்க எண்ணம்வரும். "பசிவந்தால் பத்தும் பறக்கும்" என்னும் பழமொழியை பொய்யின் தந்தையாகிய சாத்தானும் அறிந்தான். வனாந்தரத்திலே வாழ்விக்கும்வள்ளல் நாற்பது நாட்கள் தவம் செய்தார். உபவாசமாயிருந்தார். உடல் தளர்ச்சி வரும்பொழுது உள்ளத்தின் வீழ்ச்சியும் இடம்பெறக்கூடும் என்பதை உணர்ந்து, கிறிஸ்துவின் பசியை, அவரின் பலவீனத்தைத் தனது வெற்றியின் கேடயமாகநினைத்துக்கொண்டு சோதனை செய்வோன் யேசுவைச்சோதிக்கிறான். "நீர் தேவகுமாரனாய் இருந்தால் இக்கல்லை அப்பமாக்கும்?" எனச் சவால் விடுத்தான் விறுக்கன்.

நீர் தேவகுமாரனாய் இருந்தால் ... என்னும் வினாவால் கிறிஸ்துவின் மனதிலே தமது தேவசுபாவத்தைக் குறித்து, தெய்வத்தன்மையைப் பற்றிச் சந்தேகத்தீயை மூட்டுகிறான் சாத்தான். நீர் இறைமகனாய் இருக்கமுடியுமா? எனப் பல கேள்விக் கனல்களை எழுப்புகிறான் சாத்தான். விசுவாச சத்தியத்திலே சந்தேகத்தை உண்டாக்கினால் யேசுவை மடக்கலாம்என நினைத்து யேசு "தேவகுமாரன்" என்னும் அடிப்படை உண்மையை அசைக்க முயற்சிக்கிறான் சாத்தான். "அப்படி நீர் தேவகுமாரனாய் இருந்தால் இக்கல்லை அப்பமாக்கும்." ஆண்டவர் ஒரு மந்திரவாதி அல்ல, மாயக்காரனல்ல சாத்தானே. அவர் ஒரு கடவுள். தனக்கென்று அவர் புதுமை செய்யவில்லை. மற்றவர்களுக்கே செய்வார். ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையிலே மூன்று சோதனைகள் ஏற்படுகின்றன. உணவால், அதிகாரத்தினால், புகழால் சோதிக்கப்படுகிறான் மனிதன். இதைத்தான் புனித அருளப்பர் உடலின் இச்சையாலும், கண்களின் இச்சையாலும், வாழ்வின் பெருமையாலும் மனிதன் சோதிக்கப்படுகிறான் என்றார் (1 ஜோண் 2: 15). கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட இஸ்ராயேல் மக்களும் வனாந்தரத்திலே இம்மூன்று நாட்டங்களால் பரீட்சிக்கப்பட்டார்கள். ஆதாமும் சிங்காரத்தோப்பிலே இம்மூன்று ஆசைகளாலும் சோதிக்கப்பட்டான். முதலாம் ஆதாமின் சோதனையிலே பிசாசு வென்றது. ஆதாம் வீழ்ந்தான். இரண்டாம் ஆதாமாகிய கிறீஸ்துவின் சோதனையிலே பிசாசு வீழ்ந்தது. கிறிஸ்து ஜெயித்தார். விசுவாசம் இருக்கும் இடத்திற்றான் சந்தேகம் உண்டு. எங்கே விசுவாசம் இல்லையோ அங்கே சந்தேகம் இல்லை. எங்கே நீதியும் நேர்மையும் உண்மையும் உண்டோ அங்கே தான் சோதனையும் அதிகம். எவ்வளவுக்கு ஒருவன் பரிசுத்தமாய் இருக்கிறானோ அவ்வளவுக்கு அதிகமாகப் பரிசுத்ததனத்துக்கு எதிராகச் சோதனை உண்டு. மனித சுபாவத்தை ஏற்றுக்கொண்டால் சோதனையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்துநாதர் மனிதனாய்ப் பிறந்தபடியால் இவரும் சோதனைக் குட்பட்டார்.

"துன்பத்தால் அவரும் சோதிக்கப்பட்டார்; எமது சோதனையில் சகாயம்புரிய அவருக்கு ஆற்றல் உண்டு" எனப் புனித சின்னப்பர் எபிரேயருக்கு எழுதிய நிருபத்தில் கூறுகிறார் (எபி. 2 : 18).

ஆண்டவரின்முதல் சோதனை உடலைச் சார்ந்தது. ஏனெனில், மாற்றான் கல்லை அப்பமாக்கச் சொன்னான். இரண்டாம் சோதனை புத்தியைச் சேர்ந்த சோதனை; ஏனெனில் விரோதி சகல இராச்சியங்களையும் காட்டி அவைகள்மேல் உள்ள அதிகாரத்தை ஆண்டவருக்குக் கொடுப்பதாகக் கூறுகிறான். என்னே சாத்தானின் அறியாமை. மூன்றாம் சோதனை சித்தத்தைச் சார்ந்தது. ஏனெனில், மாயக்காரன் தேவாலயத்தின் உப்பரிகையின் மேல் அவரை நிறுத்தி—நீர் தேவனுடைய குமாரனேயானால் இங்கேயிருந்து தாழக்குதியும். முதல்சோதனை உடலையும், இரண்டாம், மூன்றாம் சோதனைகள் உள்ளத்தையும் சார்ந்தவைகளாக இருக்கின்றன.

### சாத்தானுக்குச் சிறந்த சவுக்கடி:

"நீர் தேவகுமாரனாய் இருந்தால் இக்கல்லை அப்பமாக்கும்" எனச்சாடினான் சாத்தான். ஆண்டவரின் சவுக்கடி—"மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல சருவேசுரனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைக்கிறான்" என்று எழுதியிருக்கிறது என்றார். சாத்தானே—வெறும் அப்பம் மாத்திரம் மனிதனை இரட்சிக்கமுடியாது, ஈடேற்ற இறைவனின் வார்த்தையே மனிதனை உய்ய வைக்கும் ஆற்றல் உடையது. உடையைவிட உடலும், உடலைவிட உயிரும் அவசியமோ, அப்பத்தைவிட உயர்ந்தது இறைவனின் வார்த்தை என்கிறார் ஆண்டவர். சாத்தானே — நீ சொல்கிறாய் கல்லை அப்பமாக்கும்படி. உனக்குத்தெரியுமா கல்லினுள்ளே இருக்கும் தேரைக்கு உணவும்; தாயின் உதரத்தில் இருக்கும் சிசுவுக்கும் உணவும் அளிக்கிறார் இறைவனின் வார்த்தை. தேவபராமரிப்பு ஒன்று உண்டு என்பதை அறிவாயா மதிகெட்டவனே, என நல்ல சவுக்கடி கொடுத்தார் ஆண்டவர்.

## அங்கிளிக்கன் சபைக் குருப்பட்டம்

தென் ஆபிரிக்காவில் பீற்றர்ஸ் பேர்க் என்னும் நகரில்உள்ள கத்தோலிக்க மகா தேவாலயம் அந்நகர அங்கிளிக்கன் சபையினருக்கு அவர்களது குருப்பட்டாபிஷேக சடங்கு நடப்பதற்குச் சென்றவாரம் இரவலாகக் கொடுக்கப்பட்டது. அங்கிளிக்கன் சபையினரின் கோவில் அங்கு சிறிதாக இருப்பதே இதன் காரணம். எனினும், அப்பகுதியிலும் ஒற்றுமை இயக்கம் பெரிதளவு நிலவுவதை இச்செய்தி விளக்குகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிறுவர் விருந்து

## அன்புள்ள தம்பி, தங்கையரே !

அன்ெருநாள் நான் எனது சைக்கிளில் பயணம்போகும்பொழுது ஒரு விசேஷத்தைக் கண்டேன். நான் பயணஞ்செய்து கொண்டிருந்த நேரம் இரவு ஏழுமணி இருக்கும்; எதிர்த்திசையிலிருந்து அநேக கார்கள், லொறிகள் வந்துகொண்டிருந்தன; என்னுடைய சைக்கிளில் ஒரு மங்கலான வெளிச்சம் மாத்திரம் இருந்தது. எதிரேவந்த மோட்டார் இரதங்களிலிருந்து கண்ணைப்பறிக்கும் வெளிச்சங்கள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. கிட்ட நெருங்கியபோது அவை என் கண்களை மங்கச்செய்தன. அப்படிப்பட்ட இரதங்கள் வரும்பொழுது நான் கண்தெரியாமல் எந்தப் பள்ளத்துள் இறங்கிவிடுகிறேனே, எந்தமரத்தில் மோதுகிறேனே, அல்லது எவரைத் தட்டி விழுத்திவிடுகிறேனே என்று பயந்தேன்.

சற்று நேரத்திற்குப்பின் வேருெரு கார்வந்தது. அதன் வெளிச்சம் கண்ணைப் பறித்தது: ஆனல், கிட்டவந்ததும் காரின் வெளிச்சம் சற்று மங்கியது. நான் இலகுவாகப் பார்க்கக்கூடியதாய் இருந்தது. அந்தக் கார்ச்சாரதியை நான் மனதாரப் போற்றினேன். அவன் தான்மாத்திரமல்ல, பிறரும் வீதியில் நடமாடுகிருர்கள்; அவர்களைப்பற்றியும் அக்கறைகொள்ள வேணுமென்ற சிந்தனை நிறைந்தவன்.

இவ்வுலகத்தில் நாம்மாத்திரமல்ல, பிறரும் வாழவேண்டுமென்ற கவலையுடன் சீவிப்பவர்கள் அநேகர் இருந்தால் இவ்வுலகம் நன்மை அடையும்.

அண்ணு.

## அழியாது

புகழும் பெயரும் அழிந்துவிடும்
புண்ணியம் என்றும் அழியாது.

பெருகும் செல்வம் அழிவதுபோல்
பெரியோர் வாக்கு அழியாது.

கடலும் மலையும் அழிவுபெறும்
கல்விச் செல்வம் அழியாது.

உலகம் நிச்சயம் அழிந்தே போம்
உண்மை வாழும், அழியாது.

எல்லாம் அழிந்து ஒழிந்தாலும்
இறைவன் அன்போ அழியாது,

முழுச்சோம்பேறியாக, பொறுப்பற்றவராக இல்லறத்தை நடத்தி வந்த ஒருவர் இறந்து, அவருடைய சடலம் கல்லறைப் பூங்காவுக்கு வந்தது. அடக்கம் செய்த குருவானவர் இறந்தவரைப்பற்றி, அவருடைய பண்புகளைப்பற்றி பாராட்டிப் புகழ்ந்து கொண்டிருந்தார். இறந்தவரின் மனைவி குருவானவரின் சொற்களைக்கேட்டு மிரண்டாள்;

மனைவி: (16வயதுள்ள தனது மைந்தனை முழங்கையால் இடித்து அவனைத் தனக்குச் செவிசாய்க்கச்செய்து) மகனே! மண்மேட்டில் ஏறிநின்று சவப்பெட்டிக்குள் இருப்பது யார்சடலம் என்றுபார்.

மகன்: ஏனம்மா உங்களுக்கு இவ்வளவு சந்தேகம்?

மனைவி: நாம் வேறு யாரோ ஒருவருடைய அடக்கத்துக்கு வந்திருப்பதுபோலிருக்கிறது. குருவானவரின் புகழுரைக்குரிய தகுதி உன் தந்தைக்கு ஏது?

—கவிஞர் ஆர்த்தர் பாகவதர்
சர்வவியாபி.

தபசுகாலச் சிந்தனை

## மரணம் வருமே!

மண்ணில் ஒருநாள் மரணம் வருமே
எண்ணில்லாத பேர்கள் உனக்காய்
கண்ணீர் வடிப்பார் நீ அறியாய்
எண்ணி வாழ்ந்தால் பயனடைவாய்.

பெற்ருர் உற்ருர் பிரிவார் உன்னை
மற்ருேர்பலநம் மறப்பார் உன்னை
தனியாய் நீயும் சென்றிடுவாய்
இனிமேல் இங்கு வரமாட்டாய்.

பெட்டியில் உன்னை வைத்ததுமே
கட்டியழுவார் கதறிடுவார்
வெட்டிய குழியில் உன் உடலை
ஒட்டியே வைத்து மறைத்திடுவார்.

எண்ணியே சாவை வாழ்ந்துவந்தால்
எண்ணில்லாத நன்மையுண்டு
புண்ணிய பாதை சேர்ந்திடவே
கண்ணியமான வழியிதுவே.

இ. பேர்ணுட்

## 10லட்சம் மக்களைக்கொன்ற எரிமலை

இத்தாலி நாட்டைச்சேர்ந்த சிசிலி தீவிலிருக்கும் எட்னுஎன்ற எரிமலை உலகிலேயே மிகவும் பயங்கரமான எரிமலையாகும்; இப்பொழுதும் அது எரிந்து தீக்குழம்புகளைக் கக்குகிறது. கிறிஸ்து பிறப்பதற்கு 700ஆண்டுகளுக்குமுன்பு முதன்முறையாக இது எரிய ஆரம்பித்தது. கடந்த 2,500 ஆண்டுகளாய் இது எண்பதுமுறை வெடித்து எரிந்திருக்கிறது. இதுவரை இது தன் தீக்குழம்பால் கொன்றுகுவித்த மக்களின் தொகை பத்துலட்சம்.

தகவல்: நிர்மலா ஆதாரம்: யூத்வீக்லி

# அர்ச். மாற்கு சுவிசேஷம்—தொடர்ச்சி

## அர்ச். மாற்கு சுவிசேஷத்திலிருந்து பரீட்சைக்குக் கொடுபடக்கூடிய வினுக்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

5. ஜொரசேனிய நாட்டுப் பேய்பிடித்தவனின் சம்பவத்தில் தன்னைப்பற்றி வெளிப்படுத்தும்படி கட்டளையிடும் கிறிஸ்து வேறுசந்தர்ப்பத்தில் தம்மால் குணமாக்கப்பட்டவர் மௌனம்சாதிக்கவேண்டுமென்று கட்டளையிடுவது ஏன்? (5 : 1—20).

(i) (1 : 44) குஷ்டரோகி குணமாகல்.

(ii) (8 : 26) பெத்சாயிதா குருடன் குணமாகல்.

(iii) (5 : 43) ஜயரின் மகளை உயிர்ப்பித்தல்.

(iv) (7 : 36) செவிடும் ஊமையுமான ஒருவனைக் குணமாக்கல்.

மேற்கூறிய சந்தர்ப்பங்களில் கிறிஸ்து தன்னைப்பற்றி வெளிப்படுத்த வேண்டாம் என்று கூறுகின்ருர். இதற்குக் காரணம்:

(i) கிறிஸ்து தமது தொண்டானது படிப்படியாகச் செய்யப்படவேண்டும் என்று விரும்பினர். தமது தொண்டின் ஆரம்பத்திலேயே திரளானசனங்கள் அவரைப் பின்செல்வார்களாயின் இவருக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கும். மக்களின் மனதை ஆயத்தப்படுத்திய பின்னரே தன்னை வெளிப்படுத்தச் சித்தமானர்.

(ii) யூதர்கள் மெசியாவைப்பற்றிய பிழையான விளக்கங்களைக் கொண்டிருந்தனர். (உ-ம்) அவர் ஓர் உலக அரசராக வருவார் என்றும் ரோமரின் அதிகாரத்தை முறியடித்து வெற்றிவீரனுகத் தங்களுக்கு அரசியற் சுதந்திரம் அளிப்பார் என்றும் எண்ணினுர்கள். சலமோன் அரசனிலும்பார்க்க மேன்மை உடையவராய்த் தமக்கு ஓர் உன்னத யுகத்தை ஆரம்பிக்கும்படியாக மெசியா உதிப்பாரென்று தப்பபிப்பிராயம் கொண்டிருந்தனர். ஆனல், மெசியா ஒரு ஞான இராட்சியத்தை ஸ்தாபிக்கவே இவ்வுலகில் தோன்றினுர். ஆகையாற்ருன் ஐயாயிரம் பேர்களுக்கு அப்பங்களைப் பலுகச்செய்தபின் யூதர்கள் தம்மை அரசராக்கவிரும்பியபொழுது கிறிஸ்து அவ்விடத்தைவிட்டு மறைந்தார். மெசியா உலக அரசராயிருப்பாரென்ற அபிப்பாயம் கொண்ட யூதர்மத்தியில் கிறிஸ்து புதுமைகள் செய்யும்பொழுது தம்மை வெளிப்படுத்த வேண்டாம் என்று எச்சரிக்கின்ருர். ஆனல், தெக்கப்போலி, சமாரியா, யோர்தான் நதிக்கரை ஓரமாகப் பிறசாதியார் மத்தியில் அவர் புதுமைகளைச் செய்யும்பொழுது தன்னை வெளிப்படுத்தும்படி கட்டளையிடுகிருர். ஏனெனில், அப்பகுதிகளிலிருந்த மக்கள் கிறிஸ்து உலக அரசராக இருப்பாரென்று தப்பான அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கவில்லை.

6. ஸ்நாபக அருளப்பர் கொடுத்த ஞானஸ்நானத்திற்கும் கிறிஸ்துபெற்ற ஞானஸ்நானத்திற்கும் நாம் பெறும் ஞானஸ்நானத்திற்கும் உள்ள வேறுபாடுகள் எவை? (1 : 2—8, 6 : 14—29).

(i) ஸ்நாபக அருளப்பரின் ஞானஸ்நானம்:—தவம் மனந்திரும்புதல் ஆகிய அம்சங்களின் அறிகுறி.

(ii) கிறிஸ்துவின் ஞானஸ்நானம்:—கிறிஸ்து தேவசுதன் என்ற அம்சத்தைக் குறிக்கிறது.

(iii) நாம் பெறும் ஞானஸ்நானம்:—வரப்பிரசாதத்தின் ஊற்றை நமக்குத் திறந்துவிடுகிறது.

7. அர்ச். மாற்குவின் நோக்கம்:—

(i) கிறிஸ்து தேவகுமாரன் என்றும்.

(ii) இரக்கம், அன்பு, அனுதாபம், சகிப்புத்தன்மை முதலிய மானிட இயல்புகள் கொண்ட மனுஷகுமாரனெனவும் நிரூபிப்பது:

**உதாரணம்:**

(i) இரக்கம்:—சூம்பிய கரம்.

அன்பு:— (அ) இளம் வாலிபனை அன்போடு பார்த்தார்.

(ஆ) சிறுவரை அன்புடன் அரவணைத்தார்.

அனுதாபம்:—ஐயாயிரம் பேருக்கு அப்பம் பலுகச்செய்தது.

சகிப்பு:— அவரின் பாடுகள்.

# தாய் சொல்லைத் தட்டாதே

வேலு சிறுபிள்ளையாக இருக்கும்போதே அவனுடைய தந்தை இறந்துவிட்டார்; அவனுடையதாய் கூலிவேலைசெய்து வேலுவையும் அவன் தங்கையையும் காப்பாற்றிவந்தாள். வேலு கிரமமாகப் பாடசாலைக்குப் போவதில்லை. பாடங்களும் படிப்பதில்லை. வகுப்பில் அவன்தான் கடைசிப்பிள்ளை.

வேலுவின் தாய் அவனுக்கு எத்தனையோ தடவை புத்திமதி கூறினுள். "வேலு நீ கவனமாகப் படித்துப் பெரியவனுகி ஓர் உத்தியோகம் பார்க்கும்போதுதான் எங்கள்கஷ்டம் நீங்கும்; ஆகவே, ஒழுங்காகப் பாடசாலைக்குப் போய்க் கவனமாகப் படி" என்று அவள் அடிக்கடி கூறினுள். வேலு அதன்படி நடக்கவில்லை. தாய் அவனைக் கண்டித்தாள்; சில நாட்கள்செல்ல வேலுவுக்கு அடியும் விழுந்தது; அடிவாங்கும் நாட்களில் வேலு சாப்பிடாமல் படுத்துவிடுவான். தாய் அவனைஎழுப்பி அன்போடு உணவுகொடுப்பாள். புத்திமதிகளும் கூறுவாள்; தனக்கு அடிப்பதையிட்டு வேலுவுக்குத் தாய்மீது கோபமிருந்து வந்தது. வீட்டைவிட்டு வெளியேறி எங்கேயாவது சென்று உல்லாசமாகவாழ அவன் விரும்பினுன்.

ஒருநாள் வேலு பாடசாலைக்குச் செல்வதாகக் கூறிவிட்டு, தாய் சேமித்து வைத்திருந்த சொற்ப பணத்தையும் எடுத்துக்கொண்டு வேருெரு ஊருக்குப் புறப்பட்டான்; புதிய ஊரில் சிலநாட்கள் உல்லாசமாக வாழ்ந்தான். கையிலிருந்த பணம் கரைந்தது. அப்படியிருந்தும் தன் தாயிடம்திரும்பிச்செல்ல அவன்விரும்பவில்லை. பட்டினியுடன் வேலைதேடி அலைந்தான். வேலுவின் நிலையைக் கண்டு அவன்மீது பரிதாபப்பட்ட ஒருவர் அவனைத் தன்வீட்டில் வேலைக்கமர்த்திக் கொண்டார். ஆரம்பத்தில் வீட்டிலுள்ளவர்கள் அவனை அன்போடு நடத்தினுர்கள்; தன்வீட்டில் வேலைஎதுவும் செய்யாமல், வயிருர உண்டு உல்லாசமாக வாழ்ந்து வந்த வேலுவுக்குப் புதிய இடத்தில் வேலைசெய்யவே மனம்வரவில்லை. வேலு சோம்பேறித்தனமாக இருப்பதைக் கவனித்துவந்த வீட்டு எஜமானி அவனைக் கண்டித்து, அடித்ததோடு மட்டுமல்லாமல் சிலசமயங்களில் சாப்பாடு கொடுக்காமல் பட்டினியும் போட்டாள்;

பட்டினிகிடக்கும்நாட்களில் வேலுவுக்குத் தூக்கம்வரவில்லை: தன் கடந்தகாலத்தை நினைத்துப் பார்த்தான். "ஏசினுலும், அடித்தாலும் என் அம்மா என்னை எப்பொழுதாவது பட்டினி போட்டாளா? நானே சாப்பிடாமல் படுத்தால்கூட என் அம்மா என்னை எழுப்பி அன்போடு உணவு தருவாளே. அம்மா! உங்களிடம் சொல்லாமல் வீட்டைவிட்டு வெளியேறி உங்களை இவ்வளவு காலமும் மறந்திருந்ததால் நான் எவ்வளவு கஷ்டப்படுகிறேன்" என்று எண்ணியெண்ணி அழுதான்.

வேலு தன்தாயை மறந்திருந்தானேயொழிய தாய் அவனை மறந்திருக்கவில்லை; எல்லாஇடமும் தேடியலைந்தாள். கடைசியாக வேலு இருக்குமிடத்தை அறிந்து அங்குசென்ருள்; தாயைக் கண்டவுடன் வேலு அவனைக் கட்டிக்கொண்டு ஓவென்று அழுதான். தாயும் அழுதாள், தன் மகனின் பரிதாப நிலையைக் கண்டு.

ஆகவே, பிள்ளைகளே! தாய்சொல்லை ஒருநாளும் தட்டவேண்டாம்.

— சங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்களத்திலே....வீரர்கள் தேவை!

கிறிஸ்து பிறந்து 1095 ஆம் ஆண்டில் பலஸ்தினுவிலே பெரும்போர். கிறிஸ்து பிறந்து வாழ்ந்து, மன்னுயிரை மீட்கத் தன்னுயிரைப் பலியாக்கிய புனித நாட்டைத் துருக்கியர் தம்வசப்படுத்தினர். கிறிஸ்தவர்கள் அந்நாட்டில் தங்குவதற்குத் தடை! புனித பூமியைத் தரிசிக்க மறுப்பு. இந்நிலையில் பரிசுத்த தந்தை 2-ம் ஊர்பன் "கிறிஸ்தவ செல்வங்களே திரண்டெழுங்கள்! பலஸ்தீனு பூமியை மீட்கப் புறப்படுங்கள்" என்று கிறிஸ்தவ மக்களுக்கு அறைகூவினர். இக்கூற்றுக்கு "நாங்கள் சென்று இறைவனின் புனித பூமியை மீட்டு வருவோம்" என்று பதில் மொழி கூறி, விடாமுயற்சியுடன் போர் தொடுத்தனர். போர் மும்முரமாக நடந்தது. ஈற்றில் புனித பூமி மீட்கப்பட்டது.

### வீரமிகு கத்தோலிக்க இளைஞனே!

நீ வாழ்வது விஞ்ஞானத்தில் மூழ்கித்திளைக்கும 20-ம் நூற்றுண்டிலே. மேற்கண்ட வீரர்கள் செய்ததை விட இன்று நீ அதிகம் செயல்பட வேண்டியுள்ளது. இன்று அப்போர் மாற்றுருவில் தொடர்ந்து நடைபெறுகின்றது. உண்மைக்கும் வாய்மைக்கும் இடையே போர் — ஒளிக்கும் இருளுக்குமிடையே போர்— இறைவனுக்கும் சாத்தானுக்குமிடையே பெரும்போர். போர்க்களம் நம் ஈழவளநாடு. இறையுருத்தாங்கிய மக்களைச் சாத்தான் அடிமையாக்கிவிட்டான். ஆக்கிய ஆண்டவனிடமிருந்து அவர்களின் அறிவை அகற்றிவிட்டான். அழியா வாழ்வைப்பாழாக்கிவிட்டான்.

### வீர ஏந்தலே புறப்படு!

இந்நிலை என்றும் நிலைக்க விடலாமா? இளமைமிகு இளைஞனே! இன்று போராட வேண்டியது உன்கடன், அல்லலுறுவது உன் அன்புச் சகோதரர்கள் அல்லவா? ஆண்டவனின் அன்பு மக்கள் அலலவா? உடனே புறப்படு போர்க்களம் நோக்கி. நீ போராடி வெற்றி பெற வேண்டியது பலஸ்தீன் நாடல்ல — உன் தாய்த்திருநாடு — உன் மக்கள் — உன்



சகோதரர்கள். போர் முரசு கேட்கிறது. கொட்டுபவர் அண்ணல் கிறிஸ்து. இதோ, உன் போர்க்காலம்; தயங்காதே புறப்படு. கேடயம் வேண்டாம், மாருக விசுவாசத்தை உறுதிப்படுத்து. ஈட்டி ஏந்தவேண்டாம், அன்பைத் தரித்துக்கொள். துப்பாக்கி வாள் கொண்டு போராடவேண்டாம் — உண்மை கொண்டு போராடு. அன்பின் போர்— அறப்போர் — வெற்றிஉறுதி!

இப் போருக்குத் தலைமை தாங்குபவர் கிறிஸ்து. இப் படையில் பலர் சேர்ந்து அணியணியாய் நின்று போர் புரிகின்றனர். சிலர் படையை அணிவகுத்து வழிநடத்துகின்றனர் (மறைஆயர், குருக்கள்). இன்னும் மக்களுள் மக்களாக இருந்து எதிரியை முறியடிக்கின்றார்கள். ஆற்றல்மிகு இளைஞனே! நீ எந்த அணியில் நின்று போர் புரிய விரும்புகின்றாய்?

மக்களுள் இறைமகனுக இருந்து மக்களை இறைமக்களாக்க விரும்புகின்றாயா? — வருங்கால உலகில் சிறப்புறு முறையில் போராடச் சிறந்த அணியில் இதுவும் ஒன்று. மறைஆசிரியர் அணி. இதற்கு நீ உன்னையேபயிற்றிக்கொள்ள வேண்டும். பயிற்சிக் காலம் மூன்று ஆண்டுகள். தமிழகத்தில் பயில வேண்டியவை:— இறையியல், இறைவார்த்தை, இறைபணி. இவற்றிற்கு உதவியாக வேறுபலபணிகள். பயிற்சிக்குத் தேவை:—இறைவனைப்பற்றி அறிய அன்பும், ஆசையும். அன்பால் அறிந்ததைப் பிறர்க்கு அறிவிக்கத் தணியா ஆர்வம்.

### இப்பணி யாழ்-மறை நிலத்தில்

ஆண்டவனின் அழைப்புக் கிணங்கி மக்கள் மத்தியில் இறைபணி புரியும் இல்லறத் தூதவர் (மறை ஆசிரியர்கள்) பதினமர். பயிற்சியில உள்ளோர் அறுவர்.

### புரியும் பணிகள் ....

மறைபரப்புப் பணியில் குருக்களுக்குத் துணையாகவும, பாடசாலைகளில் மறை ஆசிரியர்களாகவும், வழிபாட்டில் மக்களுக்கு உதவியாகவும் இருக்கின்றனர். இன்னும் பல பணிகள் உன் ஆர்வத்தைக் காத்திருக்கின்றன.

இளைஞனே! இறை பணியில் இணைபுற வாராய்! வந்து சேராய்!!

மிகுதி அறிய விரும்புவோர் தொடர்புகொள்ள:

உமது பங்குக்குரு
அல்லது
வண. எஸ். ஜே. இம்மனுவல்,
மேற்றிராணியார் இல்லம்,
யாழ்ப்பாணம்.


விற்பனைக்கு:

**சிறுவர் வழிகாட்டி**

(முதல்நன்மைக் குறிப்பீடம்)

பிரதி: விலைசதம் 50
தபாற்செலவு வேறு.

தேவையானோர் மேல்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்:

அதிபர்,
புனித சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


# தப வாழ்க்கை என்றால் என்ன?

## தியாக சேவை — பி. சவரிமுத்து

திருச்சபையின் வழிபாட்டு வருடத்தில் நாற்பதுநாட்கள் என்ற காலத்தொகுதியை மூன்று விசேஷ சந்தர்ப்பங்களில்பிரயோகித்துவருகிறோம். அவை: ஆகமனகாலம், தபசுகாலம், கர்த்தர் உயிர்த்தெழுந்தருளின திருநாள் துவங்கிகர்த்தர் பரலோகத்துக்கு ஆரோகணமான திருநாள்வரையுள்ள காலம் எனலாம்.

தபம் எமதுநாளாந்த வாழ்க்கையில் இடம்பெற வேண்டிய ஒரு முக்கிய அம்சமாக இருந்தபோதிலும், அது திருச்சபையால் சிலகாலங்களில் விசேஷமாக வற்புறுத்தப் பட்டுவருகிறது. இவ்வாறு திருச்சபை செய்வதற்குக் காரணம்மூன்று என்று குறிப்பிடலாம்.

(1) பழைய ஏற்பாட்டுக் காலத்திலே செபத்திலும்பார்க்கத் தபத்தையேமக்கள்செய்து தேவனைப் பிரியப்படுத்தி, ஆத்தும ஈடேற்றத்தை அடையும் வழியாக அனுசரித்து வந்தனர். இந்த உண்மையைத் தமது போதனையாலும், சாதனையாலும் எமது இரட்சகரின் முன்னேடியாகிய புனித ஸ்நாபக அருளப்பர் மக்களுக்கு எடுத்து விளக்கியிருக்கிருர். அக்கால மக்களின் உடை, உணவு, உபவாசம் ஆகியன அவர்களின் தபவாழ்வைத் துலாம்பரமாக மக்களுக்கு எடுத்து விளக்கின.

(2) எமது திருமீட்பராகிய யேசுக்கிறீஸ்துநாதர் தாமும் தபத்தின் முக்கியத்துவத்தை மக்களுக்குவற்புறுத்தும்நோக்கமாகப்போலும் தமதுஞானஸ்நானத்துக்குப்பின் வனுந்தரத்துக்குச்சென்று நாற்பதுநாட்கள் இரவுபகலாக ஒன்றும்சாப்பிடாமலும் குடியாமலும் தவம் செய்தார். ஆனல் அவர் தமது போதனையில் தபத்தின் உட்கருத்தை எடுத்து விளக்கியிருக்கிருர். உடை, உணவு, உபவாசம போன்ற வெளித்தோற்றம் முக்கியமல்ல. ஆனல் தவம் ஒருவரின் உள்ளத்தில் காணப்படும் மனேநிலையையும், உள்ளத் தூய்மையையும், உடலில் ஏற்படும் ஒறுத்தலையும் குறிக்கிறதாயிருக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிருர். அவர் தபத்தின் வெளிக்கோலத்தைப்பற்றிக் கூறியவற்றை மத்தேயு 6 ஆம் அதிகாரத்தில (வச. 16—20) வாசித்து அறியமுடிகிறது.

"நீங்கள் உபவாசமாயிருக்கும்போது கள்ளஞானிகளைப் போல வாடினமுகமாய் இருக்கவேண்டாம். ஏனெனில் தாங்கள் உபவாசமா யிருக்கிறதாக மனிதருக்குத் தோன்றும்படி அவர்கள் முகங்களைச் சுண்டிக்கொள்ளுகிருர்கள். அவர்கள் தங்கள் சம்பாவனையை இவ்வுலகிலேயே அடைந்துகொண்டார்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ உபவாசமாயிருக்கும்போது உன் சிரசைத் தைலத்தால் பூசு; உன் முகத்தையும் கழுவு. உபவாசமாய் இருக்கிருயென்று மனிதர்களுக்குத் தோன்ருமல் அந்தரங்கத்திலிருக்கின்ற உன்பிதாவுக்குத் தோன்றும்படி அப்படிச்செய். அப்போது அந்தரங்கத்தில் காண்கிற உன்பிதா உனக்குச் சம்பாவனையளிப்பார். பூலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம்... ஆனல், பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். இவ்வார்த்தைகளை நாம் ஆராய்ந்து பார்ப்பின் தற்காலத் தப வாழ்க்கையின் பிரதான அம்சங்களை நாம் அறியக்கூடியதாயிருக்கிறது. தபம் ஒரு வெளிக்கிரியை மட்டுமல்ல. ஆனல், எமது புனிதவாழ்க்கையின் ஒரு பிரதிபலிப்பே தபம்என்று குறிப்பிடலாம்.

(3) தற்காலத் தப வாழ்க்கையை நாம் இறையன்பு பிறரன்புநிரம்பிய ஒரு சுயநலமற்ற தியாகம்நிரம்பிய புண்ணிய வாழ்க்கை என்று கூறவேண்டும்.

நாம்செய்யும் பலவித ஒறுத்தல்கள்—உபவாசம், ஒருசந்தி மாமிசத்தவிர்ப்பு ஆதியனயாவும் எமது ஆசாபாசங்களை அடக்க எங்களுக்கு உதவி செய்கின்றன. இவற்றின்மூலம் உலகம், சரீரம், பசாசு ஆகிய எமது மூவித சத்துருக்களை நாம் ஜெயிக்கிருேம். நாம் அனுசரிக்கும் பக்திக்கிருத்தியங்கள் எங்களுக்கு அளவற்ற ஆத்மீக நன்மைகளை விளைவிக்கின்றன. இவற்றுள் விசேஷமானவை பூசைப்பலியை ஒப்புக்கொடுத்தல், செபித்தல், (செபமாலை ஓதுதல்), சிலுவைப்பாதை சுற்றுதல் என்றுகுறிப்பிடலாம். ஆனல் உண்மையாகவே நாம் தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமாகில் எங்களை நாம் நேசிக்கிற அளவுக்குப் பிறரையும் நாம் நேசிக்கவேண்டும். இவ்வுண்மையைத்தான் தற்காலத்தில்—தபசுகாலத்தில் நாம் நன்குணர்ந்து செயலாற்ற வேண்டும். பிறர்சிநேகத்தை நாம் பேச்சளவில் மாத்திரம் அனுசரித்தல் போதவே போதாது. ஆனல் எமதுபிறர்சிநேகமானது தேவனில் நாம்கொண்டுள்ள அன்பின்நிமித்தம், தற்பரித்தியாகம், சுயநலமறுப்பு நிரம்பிய சேவை வாழ்க்கையாகத் திகழவேண்டும். எமது தவத்தின் வெளிக்காட்டல்கள் யாவும் தேவனுக்கு மகிமையும் பிறருக்கு நன்மையும் பயப்பதாக இருக்கவேண்டும்.

நாம் ஒருசந்தி, உபவாசம் செய்வதுநல்லது; ஆனல் அவற்ருல் மிஞ்சும் உணவையோ, பணத்தையோ நாம் வேதனைப்படும் வறியவர்களுக்குக் கொடுக்க முடியுமா? ஏழைகளின் பசிப்பிணியைப் போக்க முடியாதா? நமது சேவையைப் பிறருடைய நன்மைக்காக எமது திருமீட்பர் செய்தது போல அர்ப்பணித்து அருள்வாழ்வு வாழமுடியுமா? இவ்வாறு நாம் செய்யும் அன்னதானம், வஸ்திரதானம், சிரமதானம்போன்ற தானங்கள் மூலம் தான் எமது தபவாழ்க்கை பூர்த்தியடைகிறது. சமய சேவை, சமூகசேவைகளில் நாம் ஈடுபட்டுப் பலவித தர்ம செயல்களையும், பிறர்சிநேக உதவிகளையும் நாம் செய்துவந்தால்தான் "பரலோகத்தில் எங்கள் பொக்கிஷங்கள்" அதிகரிக்கும்.

எவ்வாறு ஒருவன் தனக்கு மிஞ்சும் பணத்தை — இல்லை மிச்சம்பிடித்த பணத்தை வங்கியில் போட்டுச் சேர்த்துவைக்கிருனே அதுபோலவே நமது தபவாழ்க்கையால் நாம் சேகரிக்கும் அழியாத செல்வங்களை — புண்ணியங்களை நாம் பரலோகத்தில் சேர்த்துவைக்க வேண்டும். "அங்கே பூச்சியாவது, துருவாவது அழிக்கிறதுமில்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதுமில்லை" (மத். 6, வச. 20).

நாம் வீட்டிலும், தேவாலயத்திலும் செய்யும் ஒறுத்தல்கள், பக்திக்கிருத்தியங்கள் தபவாழ்க்கைக்குஉகந்தவைமெய். ஆனல் நாம் வீதியிலும் வெளியிலும் செய்யும் சேவைகளும் பிறர்சிநேகச் செயல்களும் மேலான தபவாழ்க்கையாக இருக்கின்றன என்பதை நாம் நன்கு உணர்ந்து எமது தபசு காலத்தைக் கழிப்போமாக.

"என் வாழ்க்கையில் பெரும் இன்பத்தைநல்ல புஸ்தகங்களை வாசிப்பதன் மூலம் அடைந்தேன்."—ஆர்ச். திரேசாள்

நீதிமான்களையல்ல பாவிகளையே தேடிவந்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி
### பங்குனி—1969

| | | | |
|---|---|---|---|
| 9 | ஞாயிறு | தவக்கால 3ஆம் ஞாயிறு | [ஊ] |
| 10 | திங்கள் | கிழமைப் பூசை | [ஊ] |
| 11 | செவ்வாய் | ,, ,, | [ஊ] |
| 12 | புதன் | ,, ,, | [ஊ] |
| 13 | வியாழன் | ,, ,, | [ஊ] |
| 14 | வெள்ளி | ,, ,, | [ஊ] |
| 15 | சனி | ,, ,, | [ஊ] |

### லண்டன் சென்ருர்

யாழ்ப்பாணம், புகைதயிர நிலைய வீதியில்வதியும ஜி.எஸ். இம்மனுவேல் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரான திரு. அனான் சி.எல்.எஸ். இம்மனுவேல். தெகிழ் லண்டனிலுள்ள, லூயிஸ் காமவே, தொழில் முறையியல் கலலூரியில் பொறிமுறை, ஆக்க, எந்திரவியல் கலவி பயிலுமாறு சென்றவாரம், விமான மார்க்கமாக லண்டன் சென்றிருக்கின்ருர்.

இவர் லண்டனில் ஐந்து வருடங்களுக்குத் தங்கியிருப்பார். இவர் சம பத்திரிசியார் கல்லூரியின் ஓர் பழைய மாணவராவர்.

### குடியேற்றத் திட்டங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் மேலும் இரு பெரும் குடியேற்றத்திட்டங்கள் அமைக்கப்பட விருக்கின்றன. இவற்றில் ஒன்று பூநகரியிலே 5,000 ஏக்கரிலும், மற்றது அதனையடுத்துள்ள கனகாம்பிகைக் குளத்திலே 250 ஏக்கரிலும் அமைக்கப்படும்.

### கட்டுப்பாடு நீங்கியது

சிக்கனம் காரணமாகத் திருமணம், புதுமனைப்பிரவேசம் முதலாம் விழா வைபவங்களிலே 250பேருக்கு அதிகமான விருந்தினர்களை அழைக்கப்படாதென்று அரசாங்கம் விதித்திருந்த விலக்கு சென்ற ஞாயிற்றுக்கிழமைமுதல் நீக்கப்பட்டுவிட்டது.

### வேலையற்ற பட்டதாரிகள்

போதனையிலுள்ள இலங்கைச்சர்வகலாசாலையின் கலைப் பட்டதாரிகள் பரீட்சை முடிவுகள் இவ்வாரம வெளிவந்ததோடு இலங்கையில் வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் தொகை 10,000 பேராக அதிகரித்துள்ளது. இப் பரீட்சையில் 1,415 மாணவர்கள் பட்டதாரிகளாக அரங்கேறியிருக்கிருர்கள். சென்ற தைமாதம் வித்தியாலங்கார சர்வகலாசாலைப் பரீட்சை முடிவு வெளியானபோது வேலையற்ற பட்டதாரிகள் தொகை 8,600 பேராக அதிகரித்தது. இம் மாத முடிவிலே கொழும்பிலுள்ள இலங்கைச் சர்வகலாசாலைப் பரீட்சைமுடிவு வெளிவரும்போது வேலையின்றியிருக்கும் பட்டதாரிகள் தொகை சுமார் 12,000 பேராகிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### பாக்குநீரிணை நீச்சல்

பாக்குநீரிணையை நீந்திக் கடக்கும் இரண்டாவது நீச்சல் போட்டி இம்மாதம் 28ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. 22 மைல் நீளமான இந்த நீச்சல்போட்டி தலைமன்னாரிலிருந்து ஆரம்பமாகித் தனுஷ்கோடியில்போய் முடிவாகும. இப்போட்டியில் ஆறு பேர் கலந்துகொள்ள விருக்கின்றனர். ஒவ்வொரு நீச்சல் வீரரையும் இரு படகுகள் பின்தொடர்ந்து செலலும்.

### புதைபொருள் ஆராய்ச்சி

யாழ்ப்பாணத்திலே நிறுத்தப்பட்டிருந்த புதைபொருள் ஆராய்ச்சிவேலைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. சிகிரியாவிலே சிதைக்கப்பட்ட சுவர் ஓவியங்களைத் திரும்ப அமைத்துப் பிரசித்திபெற்ற புதைபொருள் ஆராய்ச்சிப்பகுதித் தலைவரான டக்டர் ராஜா டி. சில்வாவின் கண்காணிப்பின் கீழ் தொடந்து கந்தரோடையில ஆராய்ச்சிவேலைகள் நடைபெற்றுவருகின்றன.

### மாணவர்களுக்கு எச்சரிக்கை

பாடசாலைகளுக்குப் போவதாகச் சொல்லிவிட்டுப் படமாளிகைகளுக்குச்செல்லும் மாணவர்களின் தீயபழக்கங்களை ஒழிக்கும்படியாக இனிமேல் பொலிசார் பகல்வேளைகளில் படமாளிகைகளையும், கள்ளுக்கடைகளையும் பார்வையிட்டு அவற்றிலே காணப்படும் மாணவர்கள்மட்டிலே கடும்நடவடிக்கை எடுக்கவிருப்பதாகத் தெரியவருகிறது.

### விலாங்கு போன்ருர்

"தமிழ்மொழிக்குச் சமஅந்தஸ்துப் பெற்றுத் தருவோமென்று தமிழ்மக்கள் மத்தியிலும், சிங்களம்மட்டுமே ஆட்சிமொழியென்று சிங்கள மக்கள் மத்தியிலும் ஏமாற்றுக் கதைகள்பேசி விலாங்குகள் போல் நடந்துகொள்ளும் இடதுசாரிக் கட்சித்தலைவர்களைத் தொழிலாளர் வர்க்கம் இனிமேலும் நம்பியிருக்க முடியாது என்பதைநிரூபித்து ஐக்கிய இலங்கைஸ்தலதாபன தொழிலாளர்சங்க சாவகச்சேரிக்கிளையின் மூன்ருவது கூட்டத்தில அதன்செயலாளர் எடுத்துக்கூறியிருக்கின்ருர்.

## இலங்கை மாகா....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் மீண்டும் அவற்றை மிகவும் கவனமாக ஆராய்ந்ததன்பின் தங்கள் முடிபுகளை ரோமாபுரிக்கு அனுப்பிப் பாப்பரசரின் அங்கிகாரத்தைப் பெற்றபின்பே இவைகளின் பிரதானமான முடிபுகள் நடைமுறைக்கு இலங்கையில் வருமென்று நம்பவேண்டியிருக்கிறது. சில பல மாற்றங்களை ஒவ்வொரு மேற்றிராணிமாரும் தத்தம மேற்றிராசனத்திலுள்ள மக்களின தகுதி தேவைகளுக்கேற்ப நடைமுறைக்குக் கொண்டுவரமுடியுமென்றும் எண்ணப்படுகிறது. ஆனல் இலங்கைமாகாணத் திருச்சபை ஒன்றுசேர்ந்து நடத்த அல்லது ஸ்தாபிக்கவிருக்கும் திட்டங்கள் நிறுவனங்கள் யாவும் பாப்பரசரின் அங்கிகாரத்தைப்பெற்றபின்பே உருப்படும் என்று இச் சங்கத்தில் அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இல்லறக் கத்தோலிக்கராகிய நாம் எமது ஆயரைத் தூய ஆவியானவர் வழி நடத்தி அவர்களுக்கு வேணடிய ஞான் வெளிச்சத்தை அளித்து அவர்கள் கூடிய விரைவில் தங்கள் முடிபுகளைப் பாப்பரசருக்கு அனுப்பிவைக்கவேண்டுமென்று தினமும் பிரார்த்திக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறேம். இரண்டாம் வத்திக்கான் சங்கம் முடிந்து சுமார் நாலு வருடங்களாகிவிட்டன. எனவே எமது ஆயர்களின் முயற்சிகள் யாவும் திருச்சபையின் வளர்ச்சிக்கும் பொதுமக்களின் இரட்சணியத்துக்கும் எமது நாட்டின் நன்மைக்கும் பயனுடையனவாக இருக்கவேண்டுமென்று அல்லும் பகலும் அமலனை இறைஞ்சி வாழ்வோமாக. திருச்சபையின் மறுமலர்ச்சியே எங்கள் ஒரே நோக்கமாக நாம் எல்லவரும் வாழ்வோமாக. — பி. ச.

### வரிஉயர்த்தப்படுமா ?

"யாழ்ப்பாண மாநகரமக்களைத் திருப்திகரமாக வாழவைக்குமுகமாக வரியைக்கூடுதலாக அறவிடவேண்டிய நிலையில் யாழ்ப்பாண மாநகரசபை இருந்துவருகிறது; வாழ்க்கைச்செலவு விடம்போல ஏறுகின்றது; இதனைச்சமாளிக்க வரியைக் கூட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது" என்று நல்லூரில் நடைபெற்ற வரவேற்பு வைபவம்ஒன்றில் மேயர் தெரிவித்திருக்கின்ருர்.

### நாலுமாடிக் கட்டடம்

யாழ்ப்பாண அரசினர்பெரிய ஆஸ்பத்திரியின் வெளிநோயாளர்கள் சிகிச்சை நிலையம் ஒன்று 25லட்சம்ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கிறது. இது நான்குமாடிகளைக் கொண்டதாயிருக்கும். இதற்கான அடிகல்லை வருகிற சித்திரைமாதம் பிரதமரைக் கொண்டு நாட்டுவிப்பதற்கான ஒழுங்கு நடைபெறுகிறது.

## லற்ரறன் உடன்படிக்கைக்கு முரணுன மாற்றங்கள்

40 வருடங்களுக்கு முன் இத்தாலிய அரசாங்கத்தின் அக்கால தலைவராகிய முசோலினி வத்திக்கானுடன் செய்துகொண்ட உடன்படிக்கை லற்ரறன் உடன்படிக்கைஎனச் சரித்திரம் கூறுகின்றது. இதனல் வத்திக்கான் ஒரு தனி இராச்சியமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. மேலும் பல சரத்ததுள் இந்த உடன்படிக்கையில் இடம்பெற்றிருக்கின்றன. கத்தோலிக்க சமயமே இத்தாலிதேசத்தின் தேசிய சமயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது பிரதானமானது. ஆனல் அண்மையில் இத்தாலியின் அரசியல் திட்டத்தில் கத்தோலிக்க கொள்கைகளுக்கு மாருன சில கருமங்கள் புகுத்த முயற்சிகள் நடக்கின்றன. உதாரணமாக விவாகரத்துக்கு அனுமதி கொடுபட வேண்டுமென்பது ஒன்று. இத்தகைய மாற்றங்களை வத்திக்கான் அதிகாரிகள் எதிர்த்துவருகின்றனர். லற்ரறன் உடன்படிக்கையின்படி அதில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமானல் இருபகுதியினரும் ஒத்து மாற்ற வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கின்றது.

"எனக்கு அறிமுகமானவர்கள், என்னை அன்போடு நேசித்தவர்கள் அனைவரதும் செபங்கள் இத்தருணம் எனக்குத் தேவை"

— புனித எப்ரேம்

## நினைவு கூருவோம்

### 6-ம் ஆண்டு நிறைவு

பல வருடங்கள் வங்காலை மீசாமில் பங்குக்குருவாயிருந்து குருத்துவ, சந்நியாச, கன்னிகா அழைத்தல்களுக்கு வழிவகுத்த வண பிதா ஞானசதாசர் நல்லையா அவர்கள் இறைவனடி சேர்ந்த 6-ம் ஆண்டு நிறைவு 8-3-1969

வாழ்வில் சிநேகித்தவர்களே மரணத்தில் மறவாதீர்கள்.

குலாஸ் குடும்பங்கள் — வங்காலை.

### 11-ம் வருட ஞாபகம்

"சுவாமி! பாதாளத்திலே நின்று உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; சுவாமி, என் சத்தத்தைக் கேட்டருளும்."

பிறப்பு: 11-5-1907. இறப்பு: 10-3-1958.

"மிகவும் மதுர யேசுவே! தேவரீர் சிலுவையில் தொங்கும் பொழுது அநுபவித்த அளவில்லாத கஸ்தி நோவுகளைப பார்த்து நித்திய இளைபாற்றியை எம். எஸ். பெரேரா அவர்களுக்கு அளித்தருளும் சுவாமி. முடிவில்லாத ஒளி இவருக்குப் பிரகாசிக்கக் கடவது."

எனது அன்புமிக்க பத்தாவும், எங்கள் அன்பு நிறைந்த தந்தையுமாகிய எம். எஸ். பெரேரா (தலைமை ஆசிரியர்) அவர்கள் எம்மை மாருத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு ஆலனின் பாசஞ்சேர்ந்த 11-ம் ஆண்டு நிறைவுதினம் இம்மாதம் 10-ந் திகதி (10-3-69) பூர்த்தியாகின்றமையால், இத்தினம் சிலாபம் புனித பெர்னதேத்தம்மாள் தேவாலயத்தில் அவருடைய ஆன்ம சாந்தியின் நிமித்தம் ஓர் துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதகள், சங் சந்நியாசர் - கன்னியர்கள், இனசனர், நண்பர்கள். ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் யாவரும் தங்கள் செபங்களில் இவரை நினைவுகூரும்படி பரிவாய் வேண்டுகின்ருேம்.

அருமைப் பத்தாவை இழந்து பரிதவிக்கும்
எம். மாகிறேட் பெரேராவும்,
அருமைத் தந்தையை இழந்து துயருறும் பிள்ளைகளும்.

### 2-ம்வருட ஞாபகம்

பிறப்பு: 2—8—1906 இறப்பு: 13—3—1967

"ஜீவியத்தில்நேசித்தவர்களே! மரணத்திலும் மறவாதீர்கள்."

நித்திய பிதாவே! யேசுவின் திருப்பாடுகளின் பெறுபேறுகளைப் பார்த்து மரித்த உமது தாசனுகிய ஜேக்கப் ரோமானுடைய ஆத்துமத்துக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்.

துயருடன் நினைவுகூரும் மனைவி, பிள்ளைகள்.

242, பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை.

"என் ஆத்துமாவே, ஆண்டவரை வாழ்த்தித் துதிப்பாயாக. அவர் செய்த சகல உபகாரஙகளையும் மறந்துவிடாதே"

— சங். 102 : 2

## எம் இதய நன்றி

பண்டத்தரிப்பு

அர்ச். அந்தோனியார், யூதாததேயுவின் பெயரால் யான் கேட்ட வரம் பெற்றுக்கொண்டேன். அவர்கள் நாமம் புகழப்படுவதாக. — ஓர் அடியார்

பண்டத்தரிப்பு

அர்ச். அந்தோனியார், செபமாலைமாதா, அர்ச். யூதாததேயுவின் இரக்கத்தால் எனக்கு வந்த நோயில் நின்று தப்பிக்கொண்டேன். அவர்கள் நாமம் புகழப்படுவதாக. — ஓர் அடியார்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969ஆம் ஆ பங்குனி மீ 8ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தாபிதம்: 1876.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org